Seizure of blue films

*477 *Q.*— Thiru N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a large quantity of blue films were seized by the Vigilance Wing of the Commissioner of Police Office at Madras during March-April 1974 ; and

(*b*) if so the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆபாசத் திரைப்படச் சுருள்கள் மூன்று கைப்பற்றப்பட்டன.

(இ) இரண்டு பேரைக் காவலர் கைது செய்தனர். ஆபாசத் திரைப்படச் சுருள்கள் மூன்றும், திரைப்படக் கருவி ஒன்றும் கைப்பற்றப்பட்டன. குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர்மீது இ.பி.கோ. 292 (A) பிரிவின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அவருக்கு மாநகர IV மாஜிஸ்திரேட் ரூ. 100 அபராதம் விதித்தார். குற்றஞ்சாட்டப்பட்ட மற்றொருவர் மீது இ. பி. கோ. 292 (2) (a) (c) பிரிவின்கீழ் சைதாப்பேட்டை IX பெருநகர் மாஜிஸ்டிரேட் முன்பாகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணையில் உள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இந்தச் சம்பவங்கள் தொடர்ந்து நடக்காதபடி தீவிர நடவடிக்கைக்கான நடைமுறை ஏதாவது வகுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: குற்றங்களே இல்லாத ஒரு உலகத்தை•ஒரு நாட்டை நாம் உருவாக்க முடியாது. நடக்கின்ற குற்றங்களைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். எனினும், இப்படிப்பட்ட நடவடிக்கை எடுப்பதன் மூலம் இந்தக் காரியங்கள் பரவலாக நடப்பதை வேண்டுமானால் நாம் தடுக்கலாம்.

திரு. கே.என். குமாரசாமி: இப்போது வருகிற சினிமாக்களில் முழுக்க முழுக்க காபரே நடனம்—இன்னும் போடுகிற சுவரொட்டிகளில் அரையாடை—இதனால் இளம் உள்ளங்களின் உணர்ச்சி தூண்டப்படுகிற நிலையைப் போக்க அரசு இவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, படங்களில் வருகிற ஆடைக் குறைப்பு விஷயங்களைப்பற்றித் தணிக்கை அதிகாரிகள் தான் கவனம் செலுத்த வேண்டுமேயல்லாது அரசு நடவடிக்கை எடுக்க எதுவும் இல்லை.

திரு க. உரொ. எட்மண்ட்: இப்பேர்ப்பட்ட குற்றங்கள் மேற்கொண்டு நடக்காமல் இருக்க வேண்டுமென்றால் கடுமையான தண்டனைகள் கொடுக்கப்படவேண்டும். நமது முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது

100 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். ஆபாசமான படங்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து, அதன் மூலம் ஏராளமாகச் சம்பாதிக்கிறவர்களுக்கு இந்த நூறு ரூபாய் அபராதம் என்பது பெரியதொகை அல்ல. ஆகவே, இப்படிப்பட்ட குற்றங்கள் மேற்கொண்டு நடைபெறாமல் தடுப்பதற்கு இன்னும் கடுமையான தண்டனை வழங்கப்படவேண்டும் என்று நமது அரசு மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்யுமா? நமக்கு இருக்கிற அதிகாரத்தைக் கொண்டேயும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கேள்வி கேட்ட திரு. எட்மண்ட் அவர்களே வழக்கறிஞர். இந்த வழக்கே இ.பி.கோ. 292 (எ) பிரிவின் கீழ் போடப்பட்டது. இதன்படியே இரண்டாண்டு சிறை தண்டனை—அபராதம் ஆகிய இரண்டுமே அளிக்க முடியும். இரண்டாவது முறை இதே குற்றத்தைச் செய்பவர்களுக்கு 6 மாதத்தில் இருந்து அதிகபட்சம் இரண்டு ஆண்டுவரை தண்டனை வழங்க முடியும். திரு. எட்மண்ட் அவர்கள் இதுபோன்ற குற்றங்களைச் செய்தவர்களுக்குத் தண்டனை குறைவாக இருப்பதாகத் தெரிவித்தார்கள். இந்தக் குரல் நீதி மன்றங்களின் காதில் விழவேண்டும்.

திரு. கே.டி.கே. தங்கமணி: விஜிலன்ஸ் கமிஷனின் ஆன்யுவல் ரிப்போர்ட், 1971-72 ஆம் ஆண்டிற்குத்தான் கிடைத்திருக்கிறது. 1972-73-க்கும், 1973-74-க்குமான அவர்களது ஆன்யுவல் ரிப்போர்ட்ஸ் எங்களுக்குக் கிடைக்கச் செய்வார்களா?

We have received a report for 1971-72 only. For the other years, are the reports for 1973-74 and 1974-75 available? I would like to know whether steps will be taken to get the annuaf reports from the Commissioner about the Vigilance Wing ol the Police, particularly the Commissioner of Police, Madras.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதில் இருந்து கேட்கிறீர்கள்?

திரு. கே.டி.கே. தங்கமணி: விஜிலன்ஸ் விங் ஆப் தி கமிஷனர் ஆப் போலீஸ் பற்றி இங்கே சொன்னார்கள். 1971-72 ஆன்யுவல் ரிப்போர்ட்தான எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. அவர்களது கடந்த ஆண்டு, சென்ற ஆண்டு ரிப்போர்ட்டும் எங்களுக்குக் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: காவல்துறை கமிஷனரின் கீழ் உள்ள குற்றப் புலனாய்வுத் துறைப் பிரிவு எடுத்துக்கொண்ட நடவடிக்கை பற்றி நான் பதில் அளித்திருக்கிறேன்—விஜிலன்ஸ் கமிஷனை பற்றியது அல்ல. தனியாகக் கேள்வி போட்டால் அதுபற்றிய விவரங்களைத் தர முடியும்.

GOVERNMENT OF TAMIL NADU ... TRUTH ALONE TRIUMPHS